**S.C.No. 17/2021** **D.W.2 –** அரவிந்த்குமார் நாள்**: 17.07.2025**

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்குமார்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

**1**ஆம் எதிரி**, 2** ஆம் எதிரி**, 3** ஆம் எதிரி**, 4** ஆம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டனர்**. 5** முதல் **11** எதிரிகள் ஆஜர்**.**

**3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

**12** ஆம் எதிரி காணொலி மூலம் ஆஜர்**.** வழக்கறிஞர் ஆஜர்**.**

சிறப்பு அரசு வழக்கறிஞர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:-**

அ.சா.3 மற்றும் அ.சா.10 ஆகியோர்கள் உங்களை நீதிமன்றத்தில் முதல் விசாரணையின்போது அடையாளம் காண்பித்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. 03.10.2020 அன்று நீங்கள் எங்கிருந்தீர்கள் என்றால் அலுவலகத்தில் இருந்தேன், பிறகு தாமாக முன்வந்து கைது செய்துவிட்டார்கள் என்று சாட்சியம் அளிக்கிறார். 18.09.2020 அப்போது கொரோனா பரவிய சமயம், ஆகையால் அனைவரும் மாஸ்க் அணிந்திருந்தார்கள் என்று சொன்னால் போட்டிருந்தார்கள், ஆனால்

எ.த.சா.ஆ.2ல் யாருமே மாஸ்க் அணியவில்லை என்று சொன்னால் கொஞ்சம்பேர் அணிந்திருந்தார்கள், கொஞ்சம்பேர் அணியவில்லை. கரூரில் இருந்து பள்ளப்பட்டி 30 கி.மீ., தொலைவு இருக்கும். கரூரில் இருந்து நான் வேலைசெய்யும் இடம் 8 கி.மீ., தொலைவு இருக்கும். கரூர் பை பாசில் இருந்து பள்ளபட்டி அதிகபட்சமாக 20-25 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்று சொன்னால் 40 நிமிடமாவது ஆகும். பள்ளபட்டியிலிருந்து நீங்கள் வேலை செய்யும் இடத்திற்கு அதிகபட்சமாக 10-15 நிமிடத்தில் வரலாம் என்று சொன்னால் 20 நிமிடம் ஆகும். CCTV பதிவுகளில் நேரம் சரியாக இருக்காது என்றும், அந்த நேரத்தை மாறுபட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எ.த.சா.ஆ.2 மற்றும் எ.த.சா.ஆ.3 ஆகிய பதிவுகளில் 4, 5 வருடம் கழித்து CCTV பதிவுகளை எடுக்க சாத்தியமில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் 15 நாட்களுக்கு முன்னர் வாங்கியுள்ளதாக கூறியுள்ளீர்கள், ஆனால் எ.த.சா.ஆ.1ல் 20.03.2023 குறிப்பிடப்பட்டுள்ளது, ஆகையால் எ.த.சா.ஆ.2, எ.த.சா.ஆ.3 செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அ.சா.27 மருத்துவர் நீதிமன்றத்தில் நீங்கள்தான் எதிரி பிரேம்குமாரை மருத்துவமனையில் அனுமதித்துள்ளீர்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் இல்லை. நீங்கள் நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்யும்போதோ, அல்லது வேறு மனு தாக்கல் செய்யும்போதோ நீங்கள் சம்பவத்தின்போது வேலை செய்து கொண்டிருந்தீர்கள் என்று கூறவில்லை என்று சொன்னால்

அதுபற்றி எனக்கு தெரியாது. நீங்கள் வழக்கில் இருந்து தப்பிக்கவேண்டி உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எ.த.சா.ஆ.2 பென் டிரைவ் மற்றும் எ.த.சா.ஆ.3 DVD ஆகியவை சட்டப்படி ஆய்வு செய்யாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதால் அது செல்லத்தக்கதல்ல என்றும், சாட்சியமாக ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.